*செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### (அ) அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டத்தைப் பற்றி நான் தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறேன். எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தொடர்ந்து நினைவுபடுத்தவில்லை, நீங்கள் இன்று காலையில்தான் கொடுத்துள்ளீர்கள். (குறுக்கீடு) இன்று காலையில்தான், நீங்கள் என்னிடம் கொடுத்துள்ளீர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கொடுத்துள்ளேன். இன்றைக்கு கொடுத்தது இரண்டாவது தடவையாகும். (குறுக்கீடு) நான் தொடர்ந்து பேசட்டுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது விளக்கம் தருவதாக இருந்தால், நான் பேசுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அத்திக்கடவு–அவினாசி திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் உள்ளதா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

2016 ஆகஸ்ட் 3]

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டம் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களுடைய உணர்வோடு கலந்திருக்கக்கூடிய திட்டம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, அந்த மாவட்டங்களைச் சார்ந்திருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி, தேர்தலுக்கு முன்னால், ஒரு மிகப் பெரிய தொடர் போராட்டங்கள், சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை நடத்தியது பற்றி இந்த நாடே அறியும்; இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்தத் திட்டம், பவானி ஆற்றிலிருந்து கடலில் கலந்து வீணாகக்கூடிய 30 டி.எம்.சி. அடி நீரை, பில்லூர் என்ற இடத்திலிருந்து விவசாயிகளுக்குப் பயனுள்ள வகையில் திருப்பி விடப்படும் திட்டமாகும். இது அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. கடலில் கலந்து வீணாகக்கூடிய இந்த தண்ணீர் திருப்பி விடப்பட்டால் நீர் வள ஆதாரத் துறையின் கீழ் உள்ள. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன் என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையை முடித்து விடுகிறேன். 31 ஏரிகளுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய 40 ஏரிகளுக்கும், கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள 538 குட்டைகளுக்கும் நீர் ஆதாரம் நிச்சயமாகக் கிடைக்கும். இத்திட்டத்திற்காக, 3.27 கோடி ரூபாயை ஏற்கெனவே அரசு நிதியாக ஒதுக்கியுள்ளது. அந்த நிதி எந்தளவிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அவருக்கு அதற்கான விளக்கத்தை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.*

*அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டம்மூலம், பவானி ஆற்றின் வெள்ள உபரி நீரினை கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்குத் திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பிரதானக் கால்வாய், பில்லூர் அணையின் 5 கிலோ மீட்டர் மேற்புறத்திலிருந்து துவங்கி, 35.20 கிலோ மீட்டரில் உள்ள அச்சம்பாளையம் வரை செல்கின்றது. அச்சம்பாளையம் பிரதானக் கால்வாயிலிருந்து இரண்டு கிளை கால்வாய்கள் பிரிகின்றன. முதல் பிரிவு கால்வாய் பெருந்துறை வரை 72.95 கிலோ மீட்டர் நீளத்திலும், இரண்டாவது பிரிவு கால்வாய் அவினாசி பகுதியில் 21.65 கிலோ மீட்டர் நீளத்திலும் அமையவுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 31 பொதுப் பணித் துறையின் ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் ஏனைய 538 நீர் நிலைகள் ஆகியவற்றை நிரப்புவதன்மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதுடன் பாசன வசதியையும் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*முற்பகல் 11–00*

*அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, 2011–2012 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி ரூ.1,862 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்காக, மத்திய நீர்க் குழுமம், கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டம் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி அமைய வாய்ப்பில்லை எனவும், இத்திட்டத்தினை பாசனத் திட்டமாக மாற்றி அமைக்கலாம்*

2016 ஆகஸ்ட் 3] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*எனவும் மத்திய நீர்க் குழுமம் தெரிவித்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, இடைக்கால நிதிநிலை அறிக்கை 2016–2017–ல், அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தினை நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டும் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாகச் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1,694 ஏக்கர் பட்டா நிலத்தையும், 28 ஏக்கர் வன நிலத்தையும் கையகப்படுத்தும் முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.327 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு ரூ.3,523 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு, மத்திய நீர்க் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வனத் துறை மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## (ஆ) மானியக் கோரிக்கையின்போது தினமும் பிரதான எதிர்க்கட்சிக்கு விவாதத்தை முடித்து வைக்கும் வாய்ப்பு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைய கூட்டத் தொடரில் பேசவிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியலைப் பார்த்தேன். மானியக் கோரிக்கை விவாதத்தில், பிரதான எதிர்க்கட்சி* wind–up *பண்ணி பேசிய பிறகுதான், மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரை வழங்குவார்கள். ஆனால், அந்த வாய்ப்பினை பிரதான எதிர்க்கட்சிக்குத் தராமல், நீங்கள் ஆளுங்கட்சிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், என் அனுபவத்தில், இதுவரையில் இவ்வாறு நடைபெற்றதில்லை. பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான்* wind–up *பண்ணுவார்கள்; உடனே, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் வேண்டுமெனில், முன்பு நடைபெற்ற அவை நடவடிக்கை குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லையென்று சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு)*